**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org
Web: www.peopleswatch.org

07.10.11

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.10.2011 முதல் 07.10.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**01-10-2011 முதல் 07-10-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 16 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 9 |
| 5. | வகுப்பறை வன்முறை | 2 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | – |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 3 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 2 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 2 |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 44 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-38
## 01.10.2011 முதல் 07.10.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2422. | 01.10.2011 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரம் வீட்டுவசதி வரிய குடியிருப்பைச் சேர்ந்தவர் திருமுருகன் மனைவி முனீஸ்வரி (27). கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் துன்புறுத்தியதால் மனமுடைந்த முனீஸ்வரி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 2423. | 01.10.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணமலையைச் சேர்ந்த பிரேமா(25) அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரை காதலித்தார். அவர் மற்றொரு பெண்ணை திருமணம் செய்ததால் பிரேமா மன உளைச்சல் அடைந்தார். பம்மல் இரட்டை பிள்ளையார் கோவில் அருகே உள்ள தனது சகோதரி வீட்டிற்குச் சென்ற பிரேமா அங்கு நள்ளிரவில் நிர்வணமாக ரோட்டில் நடந்துச் சென்றதால் இரவு ரோந்துப் பணியில் இருந்த காவலர்கள் பிரோமாவை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2424. | 01.10.2011 | **சிவகங்கை மாவட்டம்:** கமுதி ஊராட்சி ஒன்றிய தேர்தலில் வேட்பாளர் பட்டியல் வெளியிடாததால் திமுக. மற்றும் அதிமுக இடையே மோதல். போலீசார் தடியடி. | மோதல் & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2425. | 01.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை தத்தனேரி திரு.வி.க மாநகராட்சிப் பள்ளியில் 10 படிக்கும் மாணவன் முகமது அல்தாப் தலைமையாசிரியர் பள்ளியில் உள்ள குப்பைகளை பெருக்குமாறு கூறியதால் மனமுடைந்த மாணவன் வீட்டிற்குச் சென்று தூக்கிட்டுத் தற்கொலை. | வகுப்பறை வன்முறை | டைம்ஸ் ஆப் இந்தியா |
| 2426. | 02.10.2011 | **மதுரை மாவட்டம்:** மேலவைத்தியநாதபுரத்தைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகள் பஞ்சவர்ணம்(22). வீட்டில் இருந்து வெளியே சென்ற பஞ்சவர்ணத்தை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2427. | 02.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஒத்தக்கடை அருகே இனயபட்டியைச் சேர்ந்த அழகர் மகள் சாதனா(11). அப்பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சாதனா மற்றும் 2 சிறுமிகள் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது, அதே பகுதியைச் சேர்ந்த மதுவேந்தன்(29), காந்தி(36), | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தவிடன்(23) சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. 3 பேர் கைது. | | |
| 2428. | 02.10.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி கீழப்புதூரைச் சேர்ந்த சக்திவேல் மனைவி சோபியா என்ற பிரியதர்ஷினி(21). சோவியா உசிலம்பட்டி பள்ளியில் ஆசிரியையாக உள்ளார். பள்ளிக்குச் சென்ற சோபியாவை அதே பகுதியைச் சேர்ந்த திணேஷ், மாயாண்டி, பிரதாப், மாதவன், அருள்வாசு ஆகியோர் கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2429. | 02.10.2011 | **சென்னை மாவட்டம்:** பல்வேறு திரைப்படங்களிலும், நாடகங்களிலும் நடித்து வருபவர் அருண்காந்த் (எ) டிங்கு மனைவி சுப்ரியா. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரட்சணை கேட்டு துன்புறுத்தியதோடு கவிதா என்ற பெண்ணை அருண்காந்த் மறுமணம் செய்ததாக சுப்ரியா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2430. | 02.10.2011 | **தர்மபுரி மாவட்டம்:** மொட்டாங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த பழனி. அதே பகுதியைச் சேர்ந்த பச்சியப்பன் மனைவி கவுரம்மாள். இருவருக்கும் ஏற்பட்ட நிலத்தகராறில் ஆத்திரமடைந்த பழனி அவரது மனைவி முனியம்மாள், மகன்கள், சம்பத், செல்வம் ஆகியோர் கவுரம்மாளை கொலை செய்ததாகப் புகார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் 4 பேருக்கும் ஆயுள்தண்டனை விதித்தார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2431. | 03.10.2011 | **மதுரை மாவட்டம்:** பெத்ததானியபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி. இவர் விராட்டிபத்து பகுதியில் மாவு மில் நடத்தி வருகிறார். இவர் தனது ரைஸ்மில்லில் பதுக்கி வைத்திருந்த ரூ. 25 ஆயிரம் மதிப்புள்ள 40 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். கந்தசாமி கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 2432. | 03.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே மங்களக்குடி கிராமத்தில் அரசு நிலத்தை தனியார் சிலர் ஆக்கிரமித்திருந்தனர். இது தொடர்பாக ஒத்தக்கடை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்க மறுத்ததால், அக்கிராமத்தைச் சேர்ந்த 50 பெண்கள் உட்பட பலர் எஸ்.பி அலுவலகத்தை முற்றுகை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2433. | 03.10.2011 | **நாகை மாவட்டம்:** நாகை வெளிப்பாளையம் மகாலெட்சுமி நகரைச் சேர்ந்த மீனவர் தேவதாஸ் மகன் | பெண்கள் மீதான வன்முறை & | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சகாயராஜ்(28). இரவு குடிபோதையில் சகாயராஜ் அப்பகுதியில் உள்ள பெண்களிடம் தகராறு செய்ததால் ஆத்திமடைந்த அதே பகுதியைச் சேர்ந்த அவரது நண்பர்கள் சகாயராஜை கல்லால் அடித்துக் கொலை. இந்நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த மீனவர் மணிகண்டன்(30) தூக்கிட்டுத் தற்கொலை. இருகொலைக்கும் தொடர்பு இருப்பதாக காவலர்கள் விசாரணை. | கொலை | |
| 2434. | 03.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புகோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணி(51) வடபழனியில் உள்ள ஒட்டலில் தங்கிருந்தபோது அவரது 12 ஆயிரம் ருபாய் மற்றும் 25 பவுன் நகையையும் அதே ஒட்டலில் தங்கியிருந்த தஞ்சாவூரைச் சேர்ந்த சாகுல்அமீது, மற்றும் முத்து திருடியதாக கைது. காவல்நிலைய விசாரணையின் போது முத்து மரணம். முத்து காவலர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டதாக உறவினர்கள் புகார். | காவல்நிலைய மரணம்<br>&<br>காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2435. | 04.10.2011 | **சென்னை மாவட்டம்:** பள்ளிக்கரணை அருகே உள்ள நன்மங்கலம் வீரபாண்டியன் நகரைச் சேர்ந்த சுரேஷ் மனைவி குமாரி(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சுரேஷ் குமாரியைக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை | தீக்கதிர் |
| 2436. | 04.10.2011 | **சென்னை மாவட்டம்:** வாலாஜா ரயில் நிலையத்தில் காவலர்கள் சோதனையில் போது பிளாட்பாரத்தில் மூட்டைகளுடன் நின்றுக் கொண்டிருந்த அம்மூர் ரோடு தெருவைச் சேர்ந்த விஜயகுமார்(23) கைது. அவரிடமிருந்து 100 கிலோ எடையுள்ள 4 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 2437. | 04.10.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** வெங்கல் அருகே உள்ள வெள்ளியூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி படிக்கும் பிளஸ்–2 மாணவர்கள் 27 ந்தேதி பள்ளிக்கு எதிரே உள்ள உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, எறையூரில் இருந்து மண் எற்றி வந்த டிப்பர் லாரி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து உணவகத்தில் புகுந்ததில் 5 மாணவர்கள் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிழிப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2438. | 04.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே வல்லம்பட்டியில், தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் வல்லம்பட்டி மேலத்தெருவைச் சேர்ந்த மணி(35), அதே பகுதியைச் சேர்ந்த | பட்டாசு ஆலை விபத்து | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அந்தோணிராஜ்(28) மரணம். | | |
| 2439. | 04.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோட்ட ரெயில்வே பறக்கும் படை டிக்கெட் பரிசோதகர் தேவசகாயம். இவர் தூத்துக்குடியில் இருந்து மைசூர் செல்லும் ரெயிலில் சோதனையின் ஈடுபட்டபோது அந்த ரயிலில் பயணம் செய்த ரிசர்வ் படையைச் சேர்ந்த 6 காவலர்கள் பொதுமக்களிடம் தகராறு செய்தனர். அதைத் தட்டிக்கேட்ட பரிசோதகர் தேவசகயாத்தை தாக்கியதாக மற்ற டிக்கெட் சோதகர்கள் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 2440. | 04.10.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** நவமால் காப்பேர் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி கவிதா(27). இவர் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு போட்டியிட வேட்புமனு தாக்கல். இவரது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் 500 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தேர்தல் ஆணையம் முன்பு ஆர்ப்பாட்டம். | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2441. | 04.10.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** போச்சம்பள்ளி ஆனந்தூரைச் சேர்ந்த சிவக்குமார் மனைவி சவுந்தர்யா(28). ஆனந்தூர் ஊராட்சி 1 வது வார்டு உறுப்பினர் பதவிக்கு போட்டியிட சவுந்தர்யா வேட்பு மனு தாக்கல். அதே வார்டில் வேட்பு மனு தாக்கல் செய்த மூக்கம்மாள் மற்றும் அவரது உறவினர் சவுந்தர்யாவிடம் வேட்பு மனுவை வாபஸ் வாங்குமாறு ஆபாசமாக பேசி மிரட்டியதால் மனமுடைந்த சவுந்தர்யா தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | தினகரன் |
| 2442. | 04.10.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூரை அடுத்த புளியந்தோப்பு மன்னார்சாமி கோயில் தெருவைச் சேர்ந்த ஷேக் முகைதீன்(65) தனது வீட்டிற்கு குடிதண்ணீர் இணைப்பு பெற இளநிலை பொறியாளர் சுரேஷ்குமாரை(35) அணுகினார். அவர் ரூபாய் 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். சுரேஷ்குமார் கைது. | லஞ்சம் | தினகரன் |
| 2443. | 04.10.2011 | **சேலம் மாவட்டம்:** கொங்கணாபுரம் அரசு நடுநிலைப்பள்ளி இடைநிலை ஆசிரியபர் உதயன். அப்பள்ளியில் படித்த 8ம் வகுப்பு மாணவியை பாலியல் பலாத்காரம் செய்ததாகப் புகார். உதயன் பணியிடைநிக்கம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை<br>&<br>வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2444. | 04.10.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகை மாவட்டம் மயிலாடுதுறையைச் சேர்ந்த சண்முகம் தலைமையில் 15 குழந்தைகளுடன் சுற்றுலா வந்தனர். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாத்தூர் தொட்டிப்பாலம் அருகே மர்ம கும்பல் பெண்களை கேலி செய்தனர். தட்டிக்கேட்டவர்களை மர்ம கும்பல் தாக்கியதாக புகார். | | |
| 2445. | 05.10.2011 | **மதுரை மாவட்டம்:** புதூர் அழகர்கோவில் ரோட்டில் பழங்கள், பொரி, கடலை மற்றும் பூஜைப் பொருட்கள் கடைகளை வியாபாரிகள் அமைத்திருந்தனர். சாலையோரம் கடைகள் வைத்திருந்த வியாபாரிகள் மீது, இன்ஸ்பெக்டர் இமானுவேல் ராயப்பன் திடிரென தடியடி. தடியடியில் தனலெட்சுமி, மாரியம்மாள், கள்ளந்திரி பேச்சி, அழகுபிள்றை ஆகியோர் படுகாயம். காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் புதூர் புறக்காவல் நிலையத்தை முற்றுகை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2446. | 05.10.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மத்திய சிறையில் தண்டனை கைதிகள், மற்றும் விசாரணை கைதிகள் இருக்கும் பிளாக்கில் செல்போன், கஞ்சா மறைத்துவைக்கப்பட்டுள்ளதா என சோதனை நடத்த முயன்றனர். இதற்கு அந்த பிளாக்கில் உள்ள கைதிகள் எதிர்ப்பு. கைதிகள் மற்றும் காவலர்கள் இடையே மோதல். வார்டன்கள் சிறைக்கைதிகளை தாக்கியதால் ஆத்திரமடைந்த கைதிகள் மரத்தின்மேல் ஏறி தற்கொலை மிரட்டல். | சிறைக்கைதி தற்கொலை முயற்சி & சிறைச்சாலை வன்முறை | தினகரன் |
| 2447. | 05.10.2011 | **தேனி மாவட்டம்:** தேனி சுப்பன் தெருவைச் சேர்ந்த சரண்யா. மாதாந்திர பத்திரிகை ஒன்றில் நிருபர்வேலை வாங்கித்தருவதாக ரூபாய் 10 ஆயிரம் வீதம் 30 பெண்களிடம் வசூலித்து ஏமாற்றியதாக கண்டமனூர் அரண்மனைப்புதூர் தெருவைச் சேர்ந்த மகேந்திரன் மீது சரண்யா புகார். மகேந்திரன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & மோசடி | தினமலர் |
| 2448. | 05.10.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே வடக்கு நாவினிப்பட்டியைச் சேர்ந்த சோனைப்பாண்டி மனைவி பஞ்சு(40). அருகே உள்ள தனது தம்பி சொக்கன் வீட்டில் இரவு தூங்கிக் கொண்டிருந்த போது பஞ்சுவின் 3 பவுன் நகை மற்றும் ரூ. 800 பணத்தை மர்ம நபர்கள் திருடிச் சென்றதாக பஞ்சு புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2449. | 05.10.2011 | **சென்னை மாவட்டம்:** திரிசூலம் பச்சையம்மான்கோவில் தெருவைச் சேர்ந்த சுப்ரமணியம்(35) மனைவி கலா(26). கணவன் மனைவி குடும்பத்தகராறில் ஆத்திரமடைந்த சுப்ரமணியம் அடித்ததில் | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கலா மரணம். சுப்ரமணியம் கைது. | | |
| 2450. | 06.10.2011 | **நாமக்கல் மாவட்டம்:** பரமத்திவேலூரில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிப்பவர்கள். குடிபோதையில் வந்த காவலர் இலங்கை அகதிகளை அடித்துச் சித்திரவதை. பலர் காயம். | காவல்நிலையச் சித்திவதை | சன் நியூஸ் |
| 2451. | 06.10.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் பகுதியில் மறவன்குளம் அருகே நான்கு வழிச்சாலையைக் கடக்க முயன்ற 60 வயது முதியவர் மீது வாகனம் மோதியதில் முதியவர் மரணம். வாகனம் நிற்காமல் சென்றதாக புகார். | முதியவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2452. | 06.10.2011 | **தேனி மாவட்டம்:** போடி அருகே ஏ.ஹைச். எம். டிரஸ்ட் வாசலில் பிறந்து 3 நாட்களே ஆன பெண் குழந்தை கிடந்ததாகவும் குழந்தையின் கால் ஊனமாக இருந்ததால் குழந்தையை விட்டுச் சென்றுள்ளனர். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2453. | 07.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** மேலப்பொன்னகரத்தைச் சேர்ந்த முருகானந்தம் மகள் சுஜிதா(24) மதுரை செங்கோட்டை பாசஞ்சர் ரயிலில் விருதுநகர் வந்தார். முதலாவது பிளாட்பாரத்தில் இறங்கி நடந்து வந்தபோது சுஜிதாவின் 6 பவுன் நகையை கோவில்பட்டி வீரவாஞ்சி நகரைச் சேர்ந்த முத்துமாரியப்பன்(25) பறித்துச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & நகை பறிப்பு | தினகரன் |
| 2454. | 07.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே நமஸ்கரித்தான்பட்டியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 4 பெண்கள் படுகாயம். | பெண்கள் மீதான வன்முறை & பட்டாசு ஆலை விபத்து | தினமணி |
| 2455. | 07.10.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேசுவரம் மீனவர்கள். இந்திய கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் மீனவர்களை தாக்கியதோடு, 50க்கும் மேற்பட்ட படகுகளின் வலைகளை அறுத்து, மீன்களை கடலில் கொட்டியதோடு, துப்பாக்கி முனையில் மீனவர்களை சிறைப்பிடித்து பின்னர் நீண்டநேரம் கழித்து விடுதலை செய்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2456. | 07.10.2011 | **மதுரை மாவட்டம்:** கீரிப்பட்டி ஊராட்சியில் தலைவர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர் பாலுச்சாமியை கிராமத்தினர் பிரச்சாரம் செய்ய அனுமதி மறுப்புதாக பாலுச்சாமி புகார். | கட்டப்பஞ்சாயத்து & சமூகப்புறகணிப்பு | தினமலர் |
| 2457. | 07.10.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை செங்கம் அடுத்த, | கட்டப்பஞ்சாயத்து | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சி.சொர்ப்பணத்தல் ஊராட்சியில் ஊராட்சித் தலைவர் பதவி, மற்றும் கவுன்சிலர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் ஓட்டு கேட்க அந்த ஊருக்குள் நுழைய வேண்டுமானால் தலைவர் பதவிக்கு போட்டியிடுபவரிடம் ரூ.10 ஆயிரமும், கவுன்சிலர் பதவி வேட்பாளர்களிடம் ரூ. 5,000 ருபாயும் நுழைவுக் கட்டணமாக கிராம மக்கள் வசூலிப்பதாக புகார். | | |
| 2458. | 07.10.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுவை நகரில் இரவு நேர டிபன் மற்றும் சிறுகடை வியாபாரிகள் மீது காவலர்கள் தாக்குவதாகவும், வியபாரிகளை காவலர்களிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என சிஐடியு தலைவர்கள் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2459. | 07.10.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை முகமது சதக் கல்லூரியில் படித்த மாணவி பானுப்பிரியாவை பேராசிரியை தரக்குறைவாக திட்டியதால் மனமுடைந் மாணவி தற்கொலை. மாணவியின் தற்கொலைக்குக் காரணமான பேராசிரியை மீது நடவடிக்கை எடுக்ககோரியும், கல்லூரியில் அடிப்படை வசதி செய்து தருமாறும் மாணவர்கள் போராட்டம். போரட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 40 பேரை கல்லூரி நிர்வாகம் இடைநீக்கம் செய்ததோடு, இது குறித்து பேராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை காவலர்கள் கைது செய்தனர். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2460. | 07.10.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி ராஜகோபால் நகர் 2–வது தெருவில் வசிக்கும் தனசேகரன் மனைவி பி. புஷ்பா. இருவரும் வாய் பேசமுடியாத மற்றும் காதுகேளாத மாற்றுத்திறனாளிகள். புஷ்பாவுக்கும் பக்கத்துவீட்டில் வசிப்போருக்கும் தகராறு ஏற்பட்டதால் பக்கத்துவீட்டில் உள்ளவர்கள் காவல்நிலையத்தில் புகார். காவலர்கள் கர்ப்பிணி என்று பாராமல் புஷ்பாவை தாக்கியதோடு, அவதூறாக பேசியதாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் புஷ்பா புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை & மாற்றுத்திறனாளிகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்